# தலைவாசல்

Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 76 | thalaivaasaltv@gmail.com | வியாழக்கிழமை | டிசம்பர் 17, 2020


## அடுத்த இரு வாரமும் அவதானத்துடன் இருங்கள்
### யாழ் வந்த இராணுவத் தளபதி எச்சரிக்கை



நாட்டில் அடுத்துவரும் இரு வாரங்கள் மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும். என இராணுவ தளபதி சவேந்திர சில்வா தெரிவித்திருக்கின்றார்.

யாழ்.மாவட்டத்திற்கு இன்று விஜயம் மேற்கொண்டிருந்த இராணுவ தளபதி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது மேலும் அவர் கூறுகையில், யாழ்.மாவட்ட மக்கள் கொரோனா

03

## இலங்கையில் கொரோனா தொற்று 35 ஆயிரத்தைக் கடந்தது

இலங்கையில் மேலும் 312 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இவர்களுள் 300 பேர் ஏற்கனவே கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களுடன் தொடர்பில்

03

## வீட்டிலிருந்து நத்தார் ஆராதனையை மேற்கொள்வோம்
### பேராயர் அழைப்பு



தற்போதைய கொரோனாத் தொற்று பரவல் அபாய நிலையை கருத்தில் கொண்டு இந்தமுறை கிறிஸ்மஸ் ஆராதனையை வீட்டில் இருந்தே மேற்கொள்ளுமாறு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

03

## முப்படையின் கண்காணிப்பில் கடைகள் திறக்க அனுமதி
### வலி மேற்கில் தீர்மானம்

யாழ்.வலி,மேற்கில் கொரோனா பரவல் அபாயம் காரணமாக மூடப்பட்டிருக்கும் நிலையில் முப்படையினர் மற்றும் சுகாதார பிரிவினரின் தீவிர கண்காணிப்புடன் சுகாதார நடைமுறைகளை மிக இறுக்கமாக கடைப் பிடித்து கடைகளை திறக்க அனுமதிக் கப்பட்டுள்ளது.

வலி,மேற்கு பிரதேச செயலகத்தில் இன்று நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது. இதப்படி நாளை வழமைபோல் வர்த்தக நிலையங்கள்

03

## யாழ். மாநகரசபை, நல்லூர் பிரதேச சபையில் நல்லதொரு ஆட்சி அமைப்போம்



### வெளிப்படையான கலந்துரையாடலுக்கு கூட்டமைப்பிற்கு மணிவண்ணன் அழைப்பு

தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் வெளிப்படையாக கலந்துரையாடி யாழ். மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபையில் நல்லதொரு ஆட்சியை அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவோம் என, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

03

## சுன்னாகம் சந்தையில் இருவருக்கு தொற்று

மருதனார்மடம் பொதுச் சந்தை கோரோனா வைரஸ் கொத்தணியில் மேலும் 2 பேருக்கு கோவிட் - 19 நோய்த் தொற்று உள்ளமை இன்று (டிசெ. 17) வியாழக்கிழமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

03

## மன்னார் பிரதேச சபை பாதீடு ஒரு வாக்கால் தப்பித்தது

மன்னார் பிரதேச சபையில் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டமானது கடும் சர்ச்சைகளுக்கு மத்தியில் இன்றைய தினம்,

வியாழக்கிழமை (17) காலை 10 மணியளவில் மன்னார் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிர் தலைமையில் சபையில் முன்வைக் கப்படது.

அதனை தொடர்ந்து ஏற்பட்ட வாத பிரதி வாதங்களை தொடர்ந்து வரவு செலவுத் திட்டமானது வாக்களிப்புக்கு விடப்பட்ட நிலையில் ஒரு, மேலதிக வாக்கு வித்தியாசத்தில் 2021 ஆண்டுக்கான வரவு

03

## கிழக்கை மிரட்டும் கோரோனா
### இன்றும் 27 பேருக்குத் தொற்று

கிழக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்று தினமும் அதிகரிப்பை ஏற்படுத்தி வரும் நிலையில் இன்றும் 27 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணம் கல்முனை பிராந்திய சுகாதார பிரிவிற்குட்பட்ட கல்முனை தெற்கில் 27 கொரோனா தொற்றாளர்கள் இன்று (டிச-17) இனங்காணப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள்

03

## அமெரிக்காவின் எம்.சி.சி ஒப்பந்தம் இரத்து
### 480 மில்லியன் அமெரிக்க டொலரை இழக்கிறது இலங்கை

எம்சிசி ஒப்பந்தத்திற்கு அமைய இலங்கைக்கு வழங்கப்படவிருந்த 480 மில்லியன் அமெரிக்க டொலர் கொடுப்பனவை ரத்துச் செய்ய அமெரிக்கா தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை கூடிய எம்சிசி பணிப்பாளர் குழு கூட்டத்தின் போது இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

03






தரணி எங்கும் தமிழராய் இணைவோம்



# வட மாகாண சந்தைகள் பூட்டு

வடமாகாணத்தில் உள்ள அனைத்து பொது சந்தைகளையும் நாளை முதல் மறுஅறிவித்தல் வரை மூடுமாறு வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

அது தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பிலையே அவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் வெறிச்சோடிய வீதிகள்





கல்முனை செயிலான் வீதியில் இருந்து சின்னத்தம்பி வரை மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக பிரகடனம் செய்யப்பட்டதை தொடர்ந்து தனிமைப்படுத்தப்பட்ட பிரதேச வீதிகள் வெறிச்சோடி காணப்படுகின்றன.

இதே வேளை இன்று (17) இப்பகுதியில் பொதுமக்கள் வெளியிடங்களுக்கு செல்ல முடியாதவாறு வீதிகள் தற்காலிக தடைகள் ஏற்படுத்தப்பட்டு இராணுவத்தினர் மற்றும் பொலிசார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் சுகாதார சேவை அதிகாரிகள் மாதிரி பரிசோதனைகளை எழுமாற்றாக மேற்கொண்டு வருகின்றனர்.

## தலைவாசல் தினம் ஒரு ஆரோக்கிய தகவல்

### கொரோனா நோய்க்கான தடுப்பூசி

கொரோனா நோய்க்கான தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டு சில நாடுகளில் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் உலக ளாவிய தொற்றுநோயின் பரம் பலை உடனடியாக கட்டுக்குள் கொண்டுவர முடியாது. எனவே கைகழுவுதல், முக கவசம் அணி தல், சமூக இடைவெளி பேணல் போன்ற நடைமுறை களை தொடர்ந்தும் கடைப்பிடி யுங்கள்.

**வைத்தியகலாநிதி கோ.றஜீவ்**

# உப்புவயல் குளம் இராணுவ தளபதியினால் திறந்து வைப்பு!



வட்டுக்கோட்டை- தென்மேற்கு உப்புவயல் குளம் இராணுவ தளபதி சவேந்திர சில்வாவினால் திறந்து வைக் கப்பட்டது.

யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியின் வழிகாட்டலில் தியாகி அறிக்கொடை நிறுவனத்தினரின் நிதிப்பங்களிப்பில், வட்டுக்கோட்டை தென்மேற்கு உப்புவயல் குளம் புனரமைப்பு செய்யப்பட்டு, இன்றைய தினம் (வியாழக்கிழமை) பொது மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இராணுவத்தினரால் கடந்த மூன்று மாதமாக புனரமைப்பு செய்யப்பட்ட குளத்தினை, கொரோனா ஒழிப்பு செய லணியின் தலைவரும் இராணுவ தளபதியுமான லெப்டினல் ஜெனரல் சவேந்திர சில்வா திறந்து வைத்தார்

யாழ்.நண்பர்கள் அமைப்பு, வட்டுக் கோட்டை தென்மேற்கு விவசாய சம் மேளனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதுவர், வலி மேற்கு பிரதேச சபை தவிசாளர், வடக்கு மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் மற்றும் இராணுவ உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினரானார் சுதாமதி

நிந்தவூர் பிரதேச சபையின் புதிய உறுப்பினராக கந்தசாமிப்பிள்ளை சுதாமதி நியமிக்கப்பட்டுள்ளார். நிந்தவூர் பிரதேச சபை தேர்தலில் பட்டியல் வேட்பாளராக இவர் நிறுத்தப்பட்டிருந்தார்.

நிந்தவூர் பிரதேச சபைத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களை சுழற்சி முறையில் நியமிப்பது என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மத்திய குழு தீர்மானித்து இருந்தது. அதற்கமை வாகவே கந்தசாமிப்பிள்ளை சுதாமதி நியமிக்கப்பட்டுள்ளார்.

நிந்தவூர் பிரதேச சபையின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உறுப் பினராக கடந்த 08.12.2020 அன்று அரச வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி புதன்கிழமை (16.12.2020) மு.ப 11 மணியளவில் நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தார்.

# கொரோனா உயிரிழப்பு 160ஆக உயர்வு!

இலங்கையில் மேலும் மூவர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தி யுள்ளார்.

78 வயதுடைய ஆண் ஒருவரும் 50 மற்றும் 43 வயதுகளையுடைய பெண்கள் இருவருமே இவ்வாறு கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

அதன்படி கொலன்னாவ பிரதேசத்தை சேர்ந்த 50 வயதுடைய பெண் ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் டிசம்பர் 14ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

உயிரிழப்புக்கான காரணம் சிறுநீரகம் செயலிழப்பு மற்றும் கொவிட் நிமோனியா நிலை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், கொழும்பு 9ஐச் சேர்ந்த 78 வயதுடைய ஆண் ஒருவர் கொழும்பு ஐனுவ வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்ற வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இரத்தம் நஞ்சானமை உறுப்புக்கள் செயலிழப்பு மற்றும் கொவிட் நிமோனியா நிலை என்பன உயிரிழப்புக்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பண்டாரகம பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய பெண் ஒருவர் ஹோமாகம வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

உயிரிழப்புக்கான காரணம் கொவிட் நிமோனியா, இரத்தம் நஞ்சானமை மற்றும் உறுப்புக்கள் செயலிழப்பு எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 160 ஆக அதிகரித்துள்ளது.

# யாழ்ப்பாண அணியின் வெற்றியை கேக் வெட்டி கொண்டாடிய இளைஞர்கள்

லங்கா பிரீமியர் லீக் இருபதுக்கு இருபது தொடரில் யாழ்ப்பாணம் ஸ்ராலியன்ஸ் அணி வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியதை அடுத்து யாழில் இளைஞர்கள் சிலர் கேக் வெட்டி தமது மகிழ்ச்சியை கொண்டாடினார்கள்.

லங்கா பிரீமியர் லீக் தொடர் கடந்த நவம்பர் 26ஆம் திகதி ஆரம்பமாகியிருந்த நிலையில் நேற்றைய தினம் புதன்கிழமை இறுதிப் போட்டி நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் காலி கிளாடியேற்றர்ஸ் மற்றும் யாழ்ப்பாணம் ஸ்ராலியன்ஸ் அணிகள் மோதியிருந்தன.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுகள் இழப்பிற்கு 188 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அணிசார்பாக, சொய்ப் மலிக் 46 ஓட்டங்களையும், திசர பெரேரா



ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும் தனஞ்சய டி சில்வா 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் தனஞ்சய லக்சன் மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இந்நிலையில், பதிலுக்கு 189 ஓட்டங் களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய காலி அணி நிர்ண யிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இந்நிலையில் 53 ஓட்டங்களால் காலி அணி தோல்வியடைந்தது.

அணிசார்பாக, பானுக ராஜபக்ச 40 ஓட்டங்களையும் அசம் கான் 36 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில், உஸ்மன் சின்வாரி மற்றும் சொய்ப் மலிக் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தனர்.

யாழ்ப்பாணம் ஸ்ராலியன்ஸ் அணி வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியதை அடுத்து யாழ்ப்பாண இளைஞர்கள் சிலர் ஒன்றிணைந்து நேற்றிரவு கேக் வெட்டி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

# கொழும்பில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்தைக் கடந்தது

கொரோனா வைரஸின் இரண்டாவது அலையின்போது கொழும்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக கொவிட்-19 தடுப்பிற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நேற்றைய தினம் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட 616 பேரில் 266 பேர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என அந்த மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கடந்த ஒக்டோபர் மாதம் 04ஆம் திகதியிலிருந்து தற்போது வரை கொழும்பு மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 123 ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பைத் தவிர்த்து நேற்றைய தினம் கண்டி மாவட்டத்தில் 99 பேர், கம்பஹா மாவட்டத்தில் 94 பேர், களுத்துறை மாவட்டத்தில் 48 பேர், இரத்தினபுரி மாவட்டத்தில் 31 பேர் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் 24 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 11 பேர், மாத்தறை மாவட்டத் தில் 08 பேர், கேகாலை மாவட்டத்தில் 08 பேர், புத்தளம் மாவட்டத்தில் 04 பேர், குருணாகல் மாவட்டத்தில் 04 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேநேரம், காலி மாவட்டத்தில் 03 பேர், நுவரெலியா, அனுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் தலா 02 பேர் என்ற அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் என்ற அடிப்படையில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், வெளிநாட்டிலிருந்து வருகை தந்த 05 பேர் கொரோனா தொற்றாளர்களாக நேற்றைய தினம் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என கொவிட்-19 தடுப்பிற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து இலங்கையில் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 34 ஆயிரத்து 737 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில் 25 ஆயிரத்து 652 நோயாளர்கள் சிகிச்சைகளின் பின்னர் குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இதனையடுத்து தொற்றுக்கு உள்ளான 8 ஆயிரத்து 925 பேர் நாடளாவிய ரீதியில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 160 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இலங்கையில்...

இருந்தவர்கள் என இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஏனைய 12 பேரும் சிறைச்சாலை கொத்தணியை சேர்ந்தவர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் இலங்கையில் இதுவரையில் 35,049 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உள்ளனர்.

## அமெரிக்காவின்...

எவ்வாறாயினும், இந்த விடயம் தொடர்பில் அதிகாரபூர்வ அறிவிப்பு இன்று (17) வெளியிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்பாட்டுக்கு அமைய 5 வருட திட்டத்தின் கீழ் இந்நாட்டின் சில துறைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும நடவடிக்கைகளுக்காக குறித்த தொகையை வழங்க அமெரிக்க தீர்மானித்திருந்தது.

எனினும், கடந்த தேர்தலில் பெற்றுக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய மறுஆய்வு இல்லாமல் ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமல் இருக்க அரசாங்கம் முடிவு செய்த நிலையில் இது தொடர்பில் ஜனாதிபதியால் குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கை மிரட்டும்...

திணைக்களம் தெரிவித்துள்ளது.

இன்று மேற்கொண்ட அண்டிஜன் பரிசோதனையில் 27 கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து அவர்களுடன் தொடர்புபட்டு மேலும் தொற்றாளர்களை இனங்காணும் வரைக்கும் குறித்த பகுதிகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு பிறப்பித்து அமுல்படுத்துவது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் மேலும் 27 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து அம்பாறை மாவட்டத்தில் இதுவரை தொற்றுறுதியானவர்களது எண்ணிக்கை 584 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார்...

செலவு திட்டமானது ஏகமனதாக வெற்றிபெற்றது.

குறித்த வாக்கெடுப்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் , தமிழர்விடுதலை கூட்டணி, ஈழ மக்கள் ஜனநாயக கட்சிகளை சேர்ந்த 10 உறுப்பினர்கள் இணைந்து வரவு செலவு திட்டத்துக்கு, ஆதரவாக வாக்களித்ததுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் ஐக்கியதேசிய கட்சியை சேர்ந்த 09 உறுப்பினர்கள் வரவு செலவு திட்டத்திற்கு எதிராகவும் வாக்களித்திருந்தனர்

ஒரு உறுப்பினர் நடு நிலை வகித்ததோடு, மேலும் ஒரு உறுப்பினர் சபை அமர்வில் கலந்து கொள்ளவில்லை.

அதனை தொடர்ந்து மேலதிக ஒரு வாக்கினால் வரவு செலவு திட்டமானது வெற்றி பெற்றது.

## யாழ். மாநகர சபை...

குறித்த விடையம் தொடர்பில் இன்றையதினம் யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதில் வழங்கும் போதே வி.மணிவண்ணன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வி.மணிவண்ணன் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபையில் சிறப்பான ஆட்சி ஒன்றை கொடுப்பதற்கான முயற்சியிலே நாங்கள் ஈடுபடுவோம். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குள்ளும் மற்றும் ஏனைய தரப்பினருடன் கலந்தாலோசித்து நல்லதோரு ஆட்சி அமைப்பதற்கு நாங்கள் காத்திரமான பங்களிப்பை வழங்குவோம்.

குறிப்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இது தொடர்பில் வெளிப்படையாக கலந்துரையாடி நல்லதொரு ஆட்சியை அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவோம் என தெரிவித்துள்ளார்.

## அடுத்த இரு வாரமும்...

முதலாவது அலை தாக்கம் ஆரம்பமானது முதல் சுகாதார அமைச்சினால் வெளியிடப்படும் சுகாதார நடைமுறைகளை வடபகுதி மக்கள் ஒழுக்கமாகவும் நேர்த்தியாகவும் கடைப்பிடிக்கிறார்கள். அதன் காரணமாக முப்படையினர் மற்றும் போலீசார் சுகாதாரப் பகுதியினரால் வடபகுதியில் இலகுவாக கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்த கூடியாததாகவுள்ளது.

அத்தோடு நேற்றைய தினம் கூட ஜனாதிபதி யாழ். மாவட்ட நிலவரம் தொடர்பில் எம்முடன் கலந்துரையாடினார். அத்தோடு அரசாங்க அதிபர் ஊடாக தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கண்காணித்து வருகிறோம். எனினும் எதிர்வரும் இரண்டு வாரங்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டிய வாரமாக காணப்படுகின்றது.

எனவே இரண்டு வாரங்களும் மக்கள் சுகாதார பிரிவினருக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும். அத்தோடு தமிழ் மக்களுக்கு இந்த கொரோனா நோயினை கட்டுப்படுத்துவதற்கு உதவியதற்காக நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் சார்பில் நான் தமிழ் மக்களுக்கு மிக்க நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

எதிர்வரும் வாரங்களில் நத்தார் மற்றும் புதுவருட கொண்டாட்டங்கள் இடம்பெறும் வாரங்கள் எனினும் அந்த காலத்தில்நாட்டில் சில புதிய சுகாதார நடைமுறைகளை நாங்கள் செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம் அது எவ்வாறான நடைமுறைகள் தொடர்பில் நாம் ஆராய்ந்து வருகின்றோம் மக்களை உழஎனை தொற்றிலிருந்து பாதுகாக்கும் முகமாக மக்களை பாதிக்காதவாறு சில சுகாதார கட்டுப்பாடுகளை எடுக்கவுள்ளோம் அதற்காக அனைவரையும் தனிமைப்படுத்த மாட்டோம்.

ஆனால் உழஎனை தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க முகமாகவே சில நடைமுறைகளை செயற்படுத்தவுள்ளோம்.

ஏனைய நாடுகளோடு ஒப்பிடும்போது இலங்கையை பொறுத்த வரைக்கும் கொரோனாவானது கட்டுப்பாட்டுக்குள் தான் இருக்கின்றது.

எனினும் அதனை தொடர்ச்சியாக பேணவேண்டும். அதற்கு பொதுமக்கள் உதவ வேண்டும் குறிப்பாக தனிமைப் படுத்தப் பட்டவர்கள் எக்காரணம் கொண்டும்

வீடுகளை விட்டு வெளியில் செல்லக் கூடாது அவ்வாறு சென்றால் ஏனையவர்களுக்கும் இலகுவாகப் பரவும் யாழ்ப்பாணத்தில் அவ்வாறு இடம்பெறவில்லை.

ஆனால் கொழும்பின் சில இடங்களில் இவ்வாறு நடந்துள்ளது. எனவே அவ்வாறானவற்றை தவிர்த்துக்கொள்ள வேண்டும் அத்தோடு எதிர்காலத்தில் நடமாடும் பிசிஆர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது எதிர்காலத்தில் கொரோனாவினை கட்டுப்படுத்துவதற்காக எதிர்வரும் வாரமளவில் சில புதிய கட்டுப்பாடுகளை நடைமுறை படுத்துவதற்கு எதிர்பார்த்து உள்ளோம் எனவும் தெரிவித்தார்.

## சுன்னாகம்...

சுன்னாகம் பொதுச் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபடும் 110 வியாபாரிகளிடம் பெறப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையிலேயே 2 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் மருதனார்மடம் கோரோனா வைரஸ் கொத்தணியின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 70ஆக அதிகரித்துள்ளது.

இன்று அடையாளம் காணப்பட்டவர்களில் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துபீட ஆய்வுகூடத்தில் இன்று 110 பேரின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன. அவற்றில் 2 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஏனைய 108 பேருக்கு தொற்று இல்லை என்று அறிக்கை கிடைத்துள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் மருதனார்மடம் சந்தை கோரோனா வைரஸ் தொற்றுக் கொத்தணியை அடுத்து சங்கானை பொதுச் சந்தை மற்றும் சுன்னாகம் பொதுச் சந்தை என்பவற்றிலும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## முப்படையின்...

திறக்கப்படவிருக்கின்றது.

மிக முக்கியமாக வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் மூக்கு மற்றும் வாய் மூடிய நிலையிலான முக கவசம் அணிதல் வேண்டும். ஆக குறைந்தது 30 நிமிடங்களுக்கு ஒருமுறையேனும் கைகளை சவர்க்காரம் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.

கைகழுவுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை வர்த்தகர்கள் மேற்கொள்ள வேண்டுமெனவும் கடைகளுக்குள் பொது மக்கள் சமூக இடைவெளி பேணாது நிற்குமிடத்து அதற்குரிய பொறுப்பினை கடை உரிமையாளரே ஏற்க வேண்டும்.

நாளை சங்கானை மரக்கறி சந்தையுடன் நெருக்கமான தொடர்பினைக் கொண்ட 100 பேருக்கான பி.சி.ஆர் பரிசோதனை சங்கானை மீன் சந்தையில் காலை 9.00 மணிக்கு நடைபெறும் என தீர்மானிக்கப்பட்டது.

## வீட்டிலிருந்து...

இந்தமுறை கிறிஸ்மஸ் ஆராதனைகளை, சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றி முன்னெடுக்குமாறு, அனைத்து கிறிஸ்த்தவ பாதிரியார்களுக்கும், பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இந்த கோரிக்கையை விடுத்தார்.

இந்தமுறை கொவிட் 19 பரவல் காரணமாக கத்தோலிக்க மக்கள் தத்தமது வீடுகளில் இருந்து மிகவும் அர்த்தபூர்வமாக கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாட வேண்டும்.

எவ்வாறாயினும் தனிமைப்படுத்தப்படாத இடங்களில் 50 பேருக்கு குறையாக எண்ணிக்கையைக் கொண்டவர்களுடன் நத்தார் ஆராதனையை நடத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் மேல்மாகாணத்தில் கிறிஸ்மஸ் நள்ளிரவு ஆராதனையை, 24ம் திகதி 6 மணி முதல் ஒவ்வொரு மணித்தியாலத்தின் அடிப்படையில் சிறிய குழுக்களை கொண்டு நடத்துமாறும் அறுவுறுத்தப்பட்டுள்ளதாக கர்தினால் தெரிவித்தார்.

அத்துடன் பிரதான நத்தார் ஆராதனை கிறிஸ்மஸ் தினத்தின் நள்ளிரவு முதல் தொலைகாட்சிகளில் நேரடியாக ஒளிபரப்பாகும் என்றும், அதன் ஊடாக கத்தோலிக்க மக்கள் கிறிஸ்மஸ் ஆராதனையை வீட்டில் இருந்து மேற்கொள்ளுமாறும் அவர் கோரியுள்ளார்.

# வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 10 ஆயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

வாழ்வாதாரத்தையும் வருமானத்தையும் மேம்படுத்துவதில் நாட்டின் பொருளாதாரம் தங்கியுள்ளமையால் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் அதற்காக 10ஆயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் வட.மத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற 'கிராமத்துடன் கலந்துரையாடல் ஊடாக வேலைத் திட்டத்துடன் மீண்டும் கிராமத்திற்கு' தேசிய வேலைத்திட்டத்தின் வட.மத்திய மாகாண குழு கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த பசில் ராஜபக்ஷ, "எதிர்வரும் 21 மற்றும் 22 ஆகிய தினங்களில் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கள் அனைத்தையும் கூட்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அந்த குழுக்கள் அழைக்கப்பட்டு ஒரு கிராம சேவகர் பிரிவிற்கு குறைந்தபட்சம் ஒரு 'கிராமத்துடன் கலந்துரையாடல்' வேலைத்திட்டத்தை நடத்தி கிராம மட்டத்தில் கருத்துக்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

இந்த வரவு செலவுத் திட்டத்தை செயற்படுத்தும்போது பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை பெற்றுக்கொள்வதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பாரிய பொறுப்புண்டு.

டிஜிட்டல் இலங்கையை உருவாக்குவதற்கு அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் முயற்சிக்கின்றார். இதற்கமைய



இலங்கையிலுள்ள அனைவருக்கும் தங்களது வீடுகளிலிருந்து தேவையான தகவல்தொடர்பு சேவைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்கிறோம்.

இம்முறையும் ஒரு இலட்சம் கிலோ மீற்றர் தூரம்வரை அபிவிருத்தி செய்து வருகிறோம். அதேபோன்று 'அனைவருக்கும் நீர்' திட்டத்தினூடாக நாட்டின் அனைத்து மக்களதும் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்வோம்.

இவை அனைத்து நடவடிக்கைகளின் போதும் சுற்றாடல் தொடர்பில் விசேட அவதானம் செலுத்துகின்றோம். நாட்டின் அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பிக்கும்போது நகர்ப்புற காடுகளை உருவாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வனவிலங்குகளினால் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதற்கும் பாரிய தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் பெண் தொழில்முனைவோர்களை உருவாக்குவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கிராமத்திற்கு மின்சாரம் கிடைக்கும் வகையில் 5000 மின்மாற்றிகளுக்கு மின்சாரம் உற்பத்தி செய்ய சூரிய சக்தியை வழங்க மின்சக்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இலவச உரம் மற்றும் நீர் வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் பாரிய தொகையை விவசாயிகளுக்காக ஒதுக்கியுள்ளது.

அவ்வாறு செய்து, விவசாய உற்பத்திகளுக்கு சிறந்த விலையை பெற்றுக்கொடுப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்கிறது.

எனினும், இதற்கு சமமான வகையில் நுகர்வோருக்கும் அந்த நிவாரணம் கிடைக்குமா என்பது சந்தேகம். அரசிடம் நிலையான நெல் இருப்பு இல்லாமை இதற்கு காரணமாகும். அடுத்த போகம் முதல் அனைத்து விவசாயிகளிடமிருந்தும் 8 முதல் 10வீத நெல்லை கொள்வனவு செய்ய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

கிராம மட்டத்தில் களஞ்சியங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கு கூட்டுறவு மற்றும் விவசாயிகள் சங்கங்களுக்கு பொருத்தமான களஞ்சியங்கள் அமைக்கப்பட வேண்டும். அவ்வாறான களஞ்சியசாலைகளுக்காக இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நெல் கொள்வனவிற்கு அவசியமான நிதியும் அரசாங்கத்தினால் இதுவரை ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக சமூர்த்தி மற்றும் கூட்டுறவிற்கும் இணைந்துகொள்ளலாம். இன்று ஏராளமான கூட்டுறவு நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன.

விவசாயிகளுக்கு தேவையான உரத்தை முறையாக விநியோகிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த அரசு போதுமான உரத்தை இறக்குமதி செய்துள்ளது.

விவசாயிகளுக்கு தேவையான சந்தர்ப்பத்தில் உரம் கிடைக்காவிடின் உரிய பயனை பெற முடியாது. உரத்துக்காகவே ஒரு இராஜாங்க அமைச்சர் இருக்கிறார். ஒரு உர பணியகம் உள்ளது. உரங்களை இறக்குமதி செய்வதற்கு அதிக பணம் ஒதுக்கப்படுகிறது. உரமானது துறைமுகத்திலிருந்து நேரடியாக இந்த மாகாணத்திற்கு அனுப்பப்படுகிறது. சமூக அமைப்புகளின் ஊடாக கிராம நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதுவரை கிராம அபிவிருத்தி சங்கங்களின் நிதி வரம்பை அதிகப்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. அத்துடன், காணி எல்லை நிர்ணயம் குறித்தும் பல்வேறு குற்றச்சாட்டுகள் காணப்படுகின்றன. காணி எல்லைகளை மாற்றுவதற்கு எவருக்கும் அதிகாரமளிக்கப்படவில்லை. நாட்டில் காணப்படும் ஒரு முக்கியமான பிரச்சினையான வட,மத்திய மாகாண மக்களுக்காக இதுவரை செயல்படுத்தப்பட்ட அனைத்து திட்டங்களிலிருந்தும் நல்ல பலன்கள் கிடைக்கப்பெற்றுள்ளன" என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# முஸ்லீம் மக்களின் சடலங்களை கட்டாயத் தகனம் செய்வது பேரினவாத ஒடுக்கு முறையே

கொரோனா நோய்த் தொற்றால் மரணம் அடைந்த முஸ்லீம் மக்களினது சடலங்களை அவர்களது மத நம்பிக்கைகளை உதாசீனம் செய்து கட்டாயத் தகனம் செய்வதும், நாட்டுக்கு வெளியே ஆளரவமற்ற தீவொன்றில் அவர்களது சடலங்களைப் புதைப்பது தொடர்பாக ஆராய்வதும் முஸ்லீம் மக்கள் மீதான இலங்கை அரசாங்கத்தின் பௌத்த, சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறையே தவிர சுகாதார நடைமுறை அல்ல என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

கொரோனா நோய்த் தொற்றால் இறந்த முஸ்லீம் மக்களின் சடலங்களைக் கட்டாய எரியூட்டும் இலங்கை அரசாங்கத்தின் நடைமுறை தொடர்பாக பொ.ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஒவ்வொரு மதத்தைச் சார்ந்த மக்களும் தாங்கள் கடைப்பிடிக்கும் மதநம்பிக்கைகளின் அடிப்படையிலேயே தங்களின் இறுதிக் கிரியைகள் செய்யப்பட வேண்டும் என்பதில் உறுதியாக நிற்பர். அந்த வகையில் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை கொண்ட இஸ்லாம் மார்க்கத்தை கடைப்பிடிக்கும் மக்கள் தங்களின் சடலங்கள் புதைக்கப்படுவதையே மரபாகக் கொண்டுள்ளனர். இஸ்லாம் மதத்தவர்கள் வால் எலும்பு என்று அழைக்கப்படும் முள்ளந்தண்டின் கடைசி எலும்பான குயிலலகு எலும்பில் இருந்தே உயிர்த்தெழல் நிகழ்வதாக நம்புகின்றனர். எரித்தால் வாலெலும்பு உடனடியாகவே சாம்பலாகி விடும் என்பதாலேயே அவர்கள் சடலத்தைப் புதைத்து வருகின்றனர்.

இந்து மதத்தவர்கள் மறு பிறப்பில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளார்கள். பௌத்தர்களும் மறுபிறப்பில் நம்பிக்கை வைத்துள்ளார்கள். கிறிஸ்தவர்கள் இறப்பின் பின்னர் நியாயத் தீர்ப்பின் அடிப்படையிலேயே சொர்க்கமும், நரகமும் தீர்மானிக்கப்படுவதாக நம்புகிறார்கள். உணர்வுபூர்வமான இந்நம்பிக்கைகளை எவரும் கேள்விக்கு உட்படுத்துவதில்லை பண்பாடு சார்ந்த இவ்விடயங்களை அறிவியல் ரீதியாக எவரும் ஆராய்வதில்லை. இவற்றைப் போன்றதே இஸ்லாமியர்களினது உயிர்த்தெழுதல் நம்பிக்கையுமாகும்.

முஸ்லீம் மக்களது சடலங்களை எரியூட்டுவதற்குச் சமூகத்தின் சகல தரப்புகளில் இருந்தும் எதிர்ப்புகள் ஏற்பட்டுள்ளபோதும் அரசாங்கம் தனது முடிவை மாற்றுவதாக இல்லை. மாறாக, மாலைதீவில் மனிதக் குடியிருப்புகள் அற்ற தீவொன்றில் புதைப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்து வருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. இதுவும் பௌத்த, சிங்கள பேரினவாதத்தின் ஒரு வெளிப்பாடே ஆகும். இலங்கைக் குடிமக்களாகத் தங்களை உணரும் முஸ்லீம் மக்களை இலங்கைக்கு வெளியே அடக்கம் செய்வது என்பது அவர்களை இலங்கையில் வேரிழக்கச் செய்யும் முயற்சியின் ஒரு கட்டமே ஆகும்.

உலக சுகாதார நிறுவனம் கொரோனா நோய்த் தொற்றால் இறந்தவர்களின் சடலங்களைக் கையாள்வது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் புதைப்பதை தடைசெய்வதாகக் குறிப்பிடவில்லை. எரிப்பதோ புதைப்பதோ எதுவாயினும் மக்களின் நம்பிக்கைகள் மதிப்பளிக்கப்பட வேண்டும் என்றே குறிப்பிட்டுள்ளது. ஆனால், இலங்கை அரசாங்கம் புதைத்தால் வைரசுக்கள் நீரால் பரவலடையும் என்று அறிவியலுக்கு ஒவ்வாத காரணத்தைக் காட்டி முஸ்லீம்களின் சடல விவகாரத்தைக் கையாண்டு வருகிறது. கொரோனாவைச் சாட்டாக வைத்து முஸ்லீம் மக்கள் மீது அரசாங்கம் மேற்கொண்டுள்ள இந்த ஒடுக்குமுறையைக் உடனடியாகவே கைவிட்டு சடலங்களை அவர்களின் விருப்பப்படியே புதைப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# தீவகத்தில் தொடரும் சட்ட விரோத மாடறுப்பு!

நிறைமாத பசுமாடு ஒன்றினை இனம் தெரியாத நபர்கள் கடத்தி படுகொலை செய்து இறைச்சி ஆக்கியுள்ளனர்.

வேலணை 7ஆம் வட்டார பகுதியில் வசிக்கும் குடும்பம் ஒன்று வளர்த்தது வந்த சுமார் ஒரு இலட்ச ரூபாய் பெறுமதியான கறவை பசு மாட்டினை இனம் தெரியாதவர்கள் கடத்தி சென்று படுகொலை செய்து இறைச்சியாக்கியுள்ளனர்.

குறித்த பசுமாடு 20 நாட்களுக்குள் கன்று போட இருந்தாக அதனை வளர்த்தவர்கள் தெரிவித்தனர். அத்துடன் அது தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தீவக பகுதிகளில் இனம் தெரியாதவர்கள் வளர்ப்பு மாடுகளை கடத்தி படுகொலை செய்து இறைச்சிகளை யாழ்ப்பாணத்திற்கு கடத்தி விற்பனை செய்து வருகின்றனர்.

அதனை கட்டுப்படுத்தும் நோக்குடன் யாழ்பாணத்தையும் தீவகத்தையும் இணைக்கும் யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை வீதியில் மண்டை தீவு சந்தியில் இராணுவம், பொலிஸாரின் சோதனை சாவடி அமைக்கப்பட்டு உள்ளது. இருந்தபோதிலும் தீவகத்தில் தொடர்ந்து பசுமாடுகள் உட்பட மாடுகள் இறைச்சியாக்கப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு கடத்தப்படுவதனால் மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.